DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 238/2019
**Depositions of PW 1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | பெத்துமணி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of October 2024

Signature of Witness.

**18.10.2024**

எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.பெருமாள்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கில் இறந்து போன முத்துராமன் எனது மைத்துனர் ஆவார். இவ்வழக்கில் காயம்பட்ட செந்தில்குமார் என்பவரை தெரியும்.கடந்த 28.01.2019 ம் தேதி சிவகாசிக்கு துக்கநிகழ்ச்சிக்கு வந்திருந்தோம். மறுநாள் காலையில் ஊருக்கு நான் இரண்டு சக்கர வாகனத்தில் சென்றேன். எனக்கு முன்னால் முத்துராமனும், செந்தில்குமாரும் மற்றொரு இரண்டு சக்கர வாகனத்தில் சென்றார்கள். மேற்படி எனது மைத்துனர் முத்துராமன் TN 59 AZ 1887 என்ற எண்கொண்ட வாகனத்தை ஓட்டிச் சென்றார். அவருக்கு பின்னால் செந்தில் குமார் அமர்ந்துசென்றார். எரிச்சந்தம் தாண்டி ஜர்சுக்கு எதிரே செல்லும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் ரோட்டில்

சென்றுகொண்டிருக்கும் போது அப்போது வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்த TN 59 BM 6647 என்ற எண்கொண்ட ஈச்சர் லாரியை அதிவேகமாக வந்து முன்னால் சென்ற முத்துராமன் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. உடனே எனது வாகனத்தை நிறுத்தி போய் பார்த்த போது செந்திலுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது, காதில் இரத்தம் வந்தது. எனது மைத்துனர் முத்துராமனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் கிடந்தார். உடனே 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் அளித்து அவர்கள் வந்து எனது மைத்துனர் உடலை பார்த்துவிட்டு ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். காயம்பட்ட செந்தில்குமாரை 108 ஆம்புலன்ஸ் மூலம் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னர் இறந்து போன எனது மைத்துனர் உடலை மற்றொரு ஆம்புலன்ஸ் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். எனது மைத்துனர் முத்துராமன் இறப்பிற்கு காரணமான ஈச்சர் வண்டியை ஓட்டி வந்த நபரை நான் நேரடியாக பார்க்கவில்லை. எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்றிருந்த போது போலீசார் சொன்னதன் பேரில் சரவணக்குமார் என்று தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார்மனு **அ.சா.ஆ-1** ஆகும். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சிவகாசியிலிருந்து எப்போது கிளம்பினேன் என்றால் 07.00 மணியளவில் கிளம்பினேன். முததுராமன் சென்ற வாகனத்திற்கும், நான் சென்ற வாகனத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 லிருந்து 100 மீட்டர் தூரம் இருக்கும். விபத்தானது இரு வண்டிகளும் நேர் நேராக தான் நடந்தது என்றால் சரிதான்.

நாங்கள் சென்று கொண்டிருக்கும் போது ஈச்சர் வாகனத்தின் வலது பக்க பம்பரில் இடித்து விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்தில் இருக்கும் வளைவில் விபத்தானது நடந்ததா என்றால் இல்லை, அதை தள்ளி தான் நடந்தது. விபத்தை ஏற்படுத்திய நபரை நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்த நபர் எனது நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 238/2019
**Depositions of PW 2 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணக்குமாரி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of October 2024

Signature of Witness.

**18.10.2024**

எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்கல்ரேவூரில் குடியிருந்து வருகிறேன். குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். இவ்வழக்கில் இறந்து போன முத்துராமன் எனது கணவர் ஆவார். இவ்வழக்கில் காயம்பட்ட செந்தில்குமாரை தெரியும். கடந்த 29.01.2019 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது அ.சா.1 போன் மூலம் எனது கணவர் விபத்தில் காயம்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடம் சென்றுபோய் பார்த்த போது எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட செந்திலுக்கு காதில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சம்பவ இடம் வந்து எனது கணவரை பரிசோதித்து பார்த்ததில் இறந்துவிட்டதாக கூறினார்கள். அவரது உடலை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு

அனுப்பிவைத்தோம். காயம்பட்ட செந்தில்குமாரை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். எனது கணவர் இறப்பிற்கு காரணமான ஈச்சர் லாரியை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்திய நபர் சரவணக்குமார் என தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கேள்விப்பட்டது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் இறந்து போன நபர் எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல.

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 238/2019
**Depositions of PW 3 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of October 2024

Signature of Witness.

**18.10.2024**

எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.பெருமாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். இவ்வழக்கில் இறந்து போன முத்துராமன் எனது தம்பி ஆவார். இவ்வழக்கில் காயம்பட்ட செந்தில்குமாரை தெரியும். கடந்த 29.01.2019 ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது அ.சா.1 போன் மூலம் எனது தம்பி விபத்தில் காயம்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடம் சென்றுபோய் பார்ப்பதற்கு முன்பே சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். செந்திலையும் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். எனது தம்பிக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட செந்திலுக்கு காதில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம்

சம்பவ இடம் வந்து எனது தம்பியை பரிசோதித்து பார்த்ததில் இறந்துவிட்டதாக கூறினார்கள். அவரது உடலை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். காயம்பட்ட செந்தில்குமாரை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். எனது தம்பி இறப்பிற்கு காரணமான ஈச்சர் லாரியை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்திய நபர் சரவணக்குமார் என தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை ஏற்படுத்திய நபரை போலீசார் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன நபர் எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல.